**செ.வெ.எண்: 81** **நாள்: 01.11.2021**

**பத்திரிக்கை செய்தி**

அரசாணை எண்:644, வருவாய் மற்றும் பேரிடர் துறை, நாள்:11.10.2021-ன் படி **"விவசாயிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் பட்டா தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் கிராம அளவில் சிறப்பு முகாம்கள் நடத்துதல்"** தொடர்பாக 2014 முதல் 2016 வரை தமிழ்நிலம் மென்பொருளில் கிராம கணக்குகள் பதிவேற்றம் செய்த போது ஏற்பட்ட கீழ்க்கண்ட பட்டா பிழை திருத்தங்கள் (கணினி பிழைகள் மட்டுமே) செய்திட கிராமம் தோறும் சிறப்பு முகாம் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற உள்ளது.

1. உட்பிரிவு எண்--புல எண் தவறாக இருந்தால்
2. பரப்பு திருத்தம்
3. பட்டாதாரர் பெயர் (அ) தந்தை -- பாதுகாவலர் பெயர் திருத்தம்
4. உறவுமுறை திருத்தம்
5. பட்டாவில் உள்ள கலங்கள் காலியாக குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள்
6. பரப்பு--பட்டாதாரர் பெயர் அருகிலுள்ள பரப்பு--பட்டாதாரர் பெயர் மாறி இருப்பது (Interchanged).

மேலும் **03.11.2021.** அன்று நாகப்பட்டினம் வட்டத்தில் **செல்லூர், ஐவநல்லூர், அந்தணப்பேட்டை, பொரவாச்சேரி, சிக்கல், வடக்குபொய்கைநல்லூர்** ஆகிய கிராமங்களிலும், கீழவேளூர் வட்டத்தில் **ஒக்கூர், இருக்கை** ஆகிய கிராமங்களிலும், **வே**தாரண்யம் வட்டத்தில் **ஆயக்காரன்புலம் 1-ம் சேத்தி, ஆயக்காரன்புலம் 2-ம்** சேத்தி ஆகிய கிராமங்களிலும், திருக்குவளை வட்டத்தில் **நத்தப்பள்ளம்** கிராமத்திலும் நடைபெற உள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள கிராம பொது மக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**